**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

**SC.No.59/2024 - PW-5**

| | |
|---|---|
| Name | திரு.பாபு |
| Husband/Father Name | ஏகம்பரம் |
| Village /Area | மின்னல் |
| Taluk | அரக்கோணம் |
| Occupation | ஓட்டுநர் |
| Age | 40 |
| Religion | இந்து |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 08.09.2025.

**(எதிரிகள் 3, 4, 6, 7ஆஜர். எதிரிகள் 1, 2, 5 கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். 28.06.2021 அன்று நான் இரவு 08.00 மணிக்கு சவாரி சென்று விட்டு வநதேன். என் அம்மா என்னிடம் எனது மாமா மகன் பஸ்வான் இறந்து விட்டதாக தகவல் கூறினார். அதன் பிறகு அரக்கோணம் காவல் நிலையத்திற்கு சென்ற போது கையொப்பம் இட சொன்னதின் அடிப்படையில் நான் கையொப்பம் இட்டேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். அது **அதசாஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான் அது **அதசாஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது).**

28.06.2021 ம் தேதி மாலை சுமார் 6.30 மணிக்கு போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்ததாகவும் அதில் நானும் பரத்தும் சாட்சி கையொப்பம் இட்டதாகவும் பிறகு அதே தேதியன்று 07.00 மணியளவில் மேல்ஆவதம் கிராமத்தில் பெட்ரோல் பங்க் பின்னால் உள்ள ராஜா செட்டியார் நிலத்தில் போலீசார் வழக்கு சொத்துக்களான சிவப்பு கலர் நிற கட்டம் போட்ட முழுக்கை சட்டை மற்றும் இரத்தம் தோய்ந்த மண் சிறிதளவு, இரத்த தோயா மண் சிறிதளவு மற்றம் 2.5 அடி ரீப்பர் கட்டையை என் முன்னிலையில் போலிசார் கைப்பாற்றினார்கள் என்றும் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** இல்லை.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.09.09 18:23:39 +0545

**II Additional District and Sessions Judge, Arakkonam.**